1,

# நாட்டுநாயன். (ஐயனார்) வரலாறு.

பாட்டு

ஆதியிலே ஈஷ்வரனார்
அரக்கனுக்கே வரம் கொடுத்து.
ஐவிரலில் ஒளியும் போது
ஐயன் பிறந்தது எந்த விதம்.

---

முன் காலத்தில் பத்மாசூரன் என்று சொல்லக் கூடிய ஒரு அசுரன், சிவபெருமானை நோக்கி. அநேக காலம் தவம் செய்தான், அவன் தவத்திற்கு சிவபெருமான் மனமிரங்கி. அவன் எதிரில் தோன்றி உனக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்டார்.

அப்போது சூரன் கர்வம் கொண்டு, 'சிவபெருமானே நான் யாரைத் தொட்டாலும் அவர்கள் எரிந்து சாம்பலாக வேண்டும். அப்பேர்ப்பட்ட வரம் எனக்கு அருள் புரிய வேண்டும் என்றான்.

அதற்கு சிவபெருமான், "அப்படியே வரம் கொடுத்தேன் என்று அருளினார், வரத்தைப் பெற்ற பத்மாசூரன் நன்றி மறந்து. சிவபெருமானுடைய தலையில் கை வைத்து எரித்து விட நினைத்து

25

சிவபெருமானை துரத்தினான். அப்போது
சிவபெருமான் பயந்து ஓடிச்சென்று
ஐவிரல் செடியில் அவரும் ஒரு செடியாக
மாறி நின்றார்.
இதைக்கண்ட கிருஷ்ண பரமாத்மா, மோகினி
என்ற பெண் வடிவம் கொண்டு அந்தப்
பத்மாசூரன் முன்போய் நின்று, சில சாகச
வார்த்தைகளைப் பேசி நடனம் ஆடினார்.
மோகினியின் நடனத்தைக் கண்ட அசு
ரன் அவள் மேல் காதல் மயக்கம் கொண்
டு, தன் சுய உணர்வை யிழந்து காதலிக்க
முயன்றான், அப்போது அந்த மோகினியான
மாயப்பெண், பத்மாசூரனை நோக்கி.
"அசுரா உன்னைப்பார்த்தால் ரொம்பவும்
அசுத்தமாய் இருக்கிறாய், அதனால் நீ
சீக்கிரம் சென்று அதோ தெரியும் குள
த்தில் நீராடி வந்தாயானால், நான் உன்னை
மணந்து கொள்வேன் என்றாள். அதைக்கேட்ட
பத்மாசூரன், பெண்ணே சீக்கிரம் சென்று

குளித்து வந்து விடுகிறேன் என்று புறப்பட்டுப்
போனது, மோகினியானவள் குளத்தில் தண்ணீர்
இல்லாமல் செய்து விட்டாள், அதே குளத்
தில் சிறிது சேற்றுடன் தண்ணீர் இருக்கும்படி
செய்தாள், பத்மாசூரன் அந்த கொஞ்ச
தண்ணீரை யாவது குளிப்போமென்று. தண்
ணீரை கையில் அள்ளி தலையில் ஊற்றிக்
தடவினான், சிவபெருமான் கொடுத்த சாபம்
அவனுக்கே பலித்து எரிந்து சாம்பலானான்.
இதைக்கண்ட மோகினியாக இருந்த கிருஷ்
ணர் சந்தோசமடைந்து, ஐவிரல்ச் செடி
மறைவில் இருந்த சிவபெருமானை அழை
த்து, என்ன காரியம் செய்து விட்டாய், நல்ல
வேளையாக அந்த அசுரனை நான் கொன்று
விட்டேன் என்றான். இப்படி மோகினி சொல்
லும் போது அவள் அழகைக் கண்ட சிவ
பெருமான் காதல் உணர்ச்சி ஏற்பட்டு
அதிலிருந்து இந்திரியம் ஸ்கலிதமாகி,
அதிலிருந்து இரட்டைப் பிள்ளைகளாகிய
அரி, அரன், என்ற நாமத்துடன், அந்த

4.

வனத்தில் நின்று துஷ்ட சம்மாரம் செய்து வந்தார்கள் என்றும், பத்மா சூரனின் மனைவியாகிய பத்துலாக்ஷி என்னும் அரக்கி அரி, அரன், இருவருக்கும் அடக்கப்பட்டு. அவர்கள் மண்டியிட்டு உட்கார வைத்து அந்த அரக்கிக்கு உணவாக ஆடுகள் பலி கொடுத்து வருகிறார்கள்.